**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**
**Deposition of witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**CC No. 115/2022**

**Deposition of witness for PW.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | விஜயகுமார் | **வயது** | : | 56 |
| **தகப்பனார் பெயர்** | : | மாணிக்கம் | **தாலுகா** | : | ஆலங்குடி |
| **கிராமம்** | : | கீரமங்கலம் காவல்நிலையம் | **தொழில்** | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Examiner of this court in accordance with the provisions of Act X of 1873.
**(A2,A3 present. A1 absent. Petition filed u/s. 317 Cr.P.C. Counsel Present)**
**(Date: 10.02.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhaar Card of Witness verified.**

**சாட்சியானர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் கீரமங்கலம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்த இவ்வழக்கின் விசாணை அதிகாரியான உதவி ஆய்வாளர் குமரவேல் தற்போது பணிமாறுதல் காரணமாக அயல் காவல்நிலையத்தில் பணியாற்றி வருகிறார். அவரது கையொப்பம் மற்றும் எழுத்துநடை எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கில் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டும் நீதியின் நலன் கருதியும் நீதிமன்ற அனுமதியுடன் எதிரிகள் தரப்பு ஆட்சேபனையின்றி உதவிஆய்வாளர் குமரவேல் என்பவருக்காக ஆவணங்களை பார்வையிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவிஆய்வாளர் குமரவேல் 11.08.2022 அன்று நிலையப்பணியில் இருந்தபோது சிங்காரம், த/பெ. செல்லன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினை பெற்று அதன்மீது நிலைய குற்ற எண்.159/2022 இதச பிரிவுகள் 379ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

2) நிகழ்நிலை புகார்தாரர் சிங்காரம் என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனு அசாஆ**.2**ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** முதல்தகவல் அறிக்கை அசாஆ**.3**ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** பின்னர் 11.08.2022 அன்று உதவிஆய்வாளர் குமரவேல் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கண்ணன், குணசேகரன் ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசர் ஆகியன தயார்செய்துள்ளார். அவைகள் முறையே அசாஆ**.4** மற்றும் அசாஆ**.5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையான சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துள்ளார். 1ஆம் எதிரியை 11.08.2022 அன்று 11.30 மணிக்கு அ.சா1இன் விவசாய தோட்டம் அருகே காரணம் கூறி கைது செய்து எதிரி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் கண்ணன் மற்றும் குணசேகரன் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

3) 1ஆம் எதிரி தானாக முன்வந்து ஆஜர்படுத்திய சுமார் 20 அடி நீளமுள்ள காப்பர் ஒயர் மற்றும் TN 55 AW 1307 என்கிற பதிவெண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ**.**சா**.**ஆ**.6**ஆகவும்**,** கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.7**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.** 2 மற்றும் 3ஆம் எதிரிகளை 11.08.2022 அன்று அ.சா.1இன் விவசாய தோட்டம் அருகே காரணம் கூறி கைது செய்துள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்துகளை படிவம் 91இன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். படிவம் **91** அ**.**சா**.**ஆ**.8**ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** சுமார் **20** அடி நீளமுள்ள காப்பர் ஒயர் அ**.**சா**.**பொ**.1**ஆகவும் மற்றும் **TN 55 AW 1307** என்கிற பதிவெண் கொண்ட **Splendor Plus** இருசக்கர வாகனம் அ**.**சா**.**பொ**.2**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.** பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 17.08.2022ஆம் தேதி இதச பிரிவுகள் **379**இன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் புலனாய்வு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கினை புலனாய்வு செய்த புலனாய்வு அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் பார்வைமகசர், மாதிரிவரைபடம்

ஆகியவற்றை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் சிங்காரம் சந்தேகத்தின் பேரில் கொடுத்த புகார் மனுவை சரியாக பரிசீலனை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், எந்தவிதமான வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்றும் கூறினால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எந்தவித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், சரியான புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி.